**"ஆசிரியர் மற்றும் அதிபர்களை மதிப்பீடு செய்தல் 2019" வேலைத்திட்டத்திற்கான அறிவுறுத்தல்.**

1. **பாராட்டுக்குரியவர்கள்**
   - ஆசிரியர்கள்.
   - அதிபர்கள்

2. **ஆசிரியர்களை தெரிவு செய்தல்.**

**2.1. தெரிவு செய்யப்படுவதற்கான அடிப்டைத் தகைமைகள்.**

- இலங்கை ஆசிரியர் சேவையில் நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியராக இருத்தல்.
- மதிப்பீட்டுப் படிவத்தை கையேற்கும் இறுதி தினத்தில் குறைந்த பட்சம் மூன்று வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தலும் சேவையில் நிரந்தரப்படுத்தப்பட்டிருத்தல் அல்லது அதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.
- பாடசாலையில் நேரடியாக கல்வியுடன் தொடர்புடைய செயற்பாடுகளில் பணியாற்றுதல் (வேறு பணிகளுக்கு தற்காலிக இணைப்பு செய்யப்பட்டிராமை)
- மதிப்பீட்டுக்கென கருத்தில் கொள்ளப்படும் வருடங்களில் சம்பளமற்ற விடுகை பெற்றுக் கொள்ளாதிருத்தல்.
- மதிப்பீட்டுப் படிவத்தை சமர்ப்பிக்கும் வருடத்தில் ஜனவரி முதலாந் திகதியன்று தற்போது சேவையாற்றும் பாடசாலையில் தொடர்ச்சியாக ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல். மதிப்பீடு நடத்தப்படும் வருடத்தின் முதலாந் தவணைக்குள் தற்போதைய பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்திருப்பின் முன்னர் சேவை செய்த பாடசாலையினூடாக விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும் என்பதோடு அப்பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**2.2. ஒரு மாகாணத்திலிருந்து ஆசிரியர்களை பாராட்டுக்குரியவர்களாகத் தெரிவு செய்யும் வகுதியும் எண்ணிக்கையும்.**

| பாடசாலை வகை | **பிரிவுகளின் அடிப்படையில் தெரிவு செய்யும் எண்ணிக்கை** | | | |
|---|---|---|---|---|
| | 1-5தரங்கள் | 6 - 9 தரங்கள் | 10-11தரங்கள் | 12 - 13 தரங்கள் |
| 1AB | 3 | 3 | 3 | 3 |
| 1C | 3 | 3 | 3 | 3 |
| 2 - வகை | 3 | 3 | 3 | - |
| 3 - வகை | 3 | - | - | - |
| மொத்தம் | 12 | 09 | 09 | 06 |

**2.3. கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்.**

✓ மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளையுடைய சகல ஆசிரியர்களும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுப் படிவத்தை (படிவம் A) பூர்த்தி செய்து அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

✓ விசேடமாகக் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் முன்னைய வருடத்தில் 2018 ஜனவரி முதலாந் திகதியிலிருந்து டிசம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்திற்குரிய தகவல்களை உள்ளடக்க வேண்டும்.

✓ ஆசிரியர் ஒருவருக்கு 2.2 இல் குறித்துக் காட்டப்பட்டுள்ள ஒரு பிரிவுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

✓ மேலே 2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் மாகாணமொன்றின் பாடசாலை வகைகளையும் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி அதிகப் பட்ச புள்ளிகளைப்

பெற்றுக் கொண்ட 36 பாராட்டுக்குரியவர்களை தேசிய மட்டத்தில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும் அதே வேளை பெற்றுக் கொண்ட புள்ளிகளுக்கு ஏற்ப தெரிவு செய்யப்படும் ஏனைய பாராட்டுக்குரியவர்கள் மாகாண மட்டத்தில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவர்.

**2.4. ஆசிரியர்களை பாராட்டுக்குரியவர்களாகத் தெரிவு செய்யும் போது பாடசாலை, வலயம், மாகாணம் மற்றும் கல்வி அமைச்சு போன்ற மட்டங்களிலான பொறுப்புக்கள்.**

| | |
|---|---|
| **பாடசாலை மட்டம்** | • A-படிவத்துக்கு அமைய பூர்த்தி செய்யப்பட்ட மதிப்பீட்டுப் படிவங்களை ஜூன் மாதம் 15 ந் திகதிக்கு முன்னராக சகல ஆசிரியர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளுதல் அதிபரின் பொறுப்பாகும்.<br><br>• ஆசிரியர்களால் பூரணப்படுத்தப்படும் தகவல்களையும் புள்ளிகளையும் உறுதிப்படுத்துதல் கீழ்க காணப்படும் அடிப்படையில் நியமிக்கப்படும் **பாடசாலை மதிப்பீட்டுக்** குழுவினால் நிறைவேற்றப்பட வேண்டும்.<br>  ▪ தலைவர் **-** அதிபர்<br>  ▪ உறுப்பினர் **1** –பிரதி அதிபர்<br>  ▪ உறுப்பினர் **2** –பிரதி அதிபர் அல்லது உதவி அதிபர்.<br><br>பிரதி அதிபர் அல்லது உதவி அதிபர் இல்லாத பட்சத்தில் (சம்பந்தப்பட்ட ஆசிரியர் விண்ணப்பிக்கும் பிரிவில் அல்லது வகுதியில் உள்ளடங்காத) பாடசாலையொன்றின் சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரை குழுவில் நியமித்துக் கொள்ள முடியும். மூவரைக் கொண்ட குழுவொன்றினை நியமித்துக் கொள்ள முடியாத பாடசாலைகள் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலைப் பெற்று அதற்கிணங்க செயற்பட வேண்டும்.<br><br>• பாடசாலை மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீட்டுப் படிவத்திற்கென புள்ளிகள் வழங்கும் போது ஒவ்வொரு ஆசிரியரும் பெற்றுக் கொண்டுள்ள புள்ளிப் பட்டியல் ஒன்றை தயாரிக்க வேண்டும். 50 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட ஆசிரியர்களின் மதிப்பீட்டு படிவங்கள் அதிபரால் ஜூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.<br><br>• பெற்றுக் கொண்ட புள்ளிகள் தொடர்பாக அதிபரால் ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டியதோடு எஞ்சிய மதிப்பீட்டுப் படிவங்களை பாடசாலையில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும். |
| **வலய மட்டம்** | • வலய மட்டத்தில் ஆசிரியர் மதிப்பீட்டுக்காக மூவர் அடங்கிய உத்தியோகத்தர் குழு ஒன்று வலயக் கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப்பட வேண்டும்.<br>• பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்து அனுப்பப்படுகின்ற ஆசிரியர் மதிப்பீட்டுப் படிவங்களை பரிசீலனை செய்து ஆசிரியர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி ஆவணங்களிலும் தகவல்களிலும் காணப்படும் தகவல்களின் சரியான தன்மையை உறுதி செய்தல் **வலய மதிப்பீட்டுக்** குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>• அதைப் போன்றே அந்த ஆசிரியர்கள் மதிபீட்டுக்குத் தகுதியானவர்கள் என்றும் ஒழுக்காற்று விசாரணை குற்றச்சாட்டுகளுக்கோ தண்டனைக்கோ உட்படுத்தப்படவில்லை என்பதை வலயக் கல்விப் பணிப்பாளரினால் பரிசீலனை செய்து உறுதி செய்து கொண்ட பின் உரிய சிபாரிசினை வழங்க வேண்டும்.<br>• நேர்முகப் பரீட்சைக்கு ஏற்ப 50 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியலையும் மதிப்பீட்டுப் படிவத்தையும் (இணைப்பு 02 ற்கு இணங்க) உறையிலிட்டு முத்திரையிடப்பட்ட பின்வலயத்தின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு ஜூலை 31 ஆந் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும் |

| | |
|---|---|
| | • எஞ்சிய மதிப்பீட்டுப் படிவங்களையும் இதர ஆவணங்களையும் தேவையான சந்தர்ப்பங்களில் சமர்ப்பிப்பதற்காக வலயக் கல்விப் பணிமனையில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். |
| | |
| **மாகாண மற்றும் தேசிய மட்டம்** | • மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் ஒருங்கிணைந்த நேர்முகப் பரீட்சைச் சபையினூடாக வலய மட்டத்தில் தெரிவு செய்து அனுப்பப்பட்ட ஆசிரியர்களை நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தி ஆவணங்களினதும் தகவல்களினதும் பிழையற்றத் தன்மையை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.<br>• நேர்முகப் பரீட்சைச் சபையினால் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் மதிப்பீட்டுக்கு தகுதியானவர்கள் என்றும் ஒழுக்காற்று விசாரணைக் குற்றச்சாட்டுகளுக்கோ தண்டனைகளுக்கோ உட்படுத்தப்படவில்லை என்பதனை மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் பரிசீலனை செய்து உறுதிப்படுத்திக் கொண்ட பின் உரிய சிபாரிசினை வழங்க வேண்டும்.<br>• முறையாகப் பூரணப்படுத்தப்படாதவையும் பாடசாலை/வலய/மாகாண மட்டத்தில் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படாததுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.<br>• அதைப் போன்றே நேர் முகப் பரீட்சைச் சபையின் அனைத்து உறுப்பினர்களினதும் கையொப்பமிடப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.<br>• கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட ஆசிரியர்கள் மத்தியில் ஒரு மாகாணத்திலிருந்து 36 பேர் வீதம் இறுதிக்கட்ட மதிப்பீட்டுக்கு தெரிவு செய்த பின் தேசிய மட்டத்தில் மதிப்பீட்டு விழா நடாத்தப்பட்டு பாராட்டப்படுவர். |
| | |

**இணைப்பு - 01**

தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர் பெயர்ப் பட்டியல்.

வலயம்..............................................

பாடசாலை வகை (1AB/1C/2/3)................

| பிரிவு | ஆசிரியரின் பெயர் | பாடசாலையின் பெயரும் முகவரியும் | தேசிய அடையாள அட்டை இலக்கமும் | தொலைபேசி இலக்கம் | பெற்றுக் கொண்ட புள்ளிகள் | விசேட குறிப்புகள். |
|---|---|---|---|---|---|---|
| **1-5** | | | | | | |
| **6-9** | | | | | | |
| **10-11** | | | | | | |
| **12-13** | | | | | | |

ஒவ்வொரு பாடசாலை வகைக்கும் ஏற்ற வகையில் தகவல்களை அனுப்ப வேண்டும்.

**3. அதிபர்களைத் தெரிவு செய்தல்**

**3.1 தெரிவு செய்வதற்கான அடிப்படைத் தகைமைகள்.**

- மதிப்பீடு நடத்தப்படும் வருடத்திற்கு முந்திய வருடத்தில் டிசம்பர் 31 ஆந் திகதிக்கு குறைந்த பட்சம் தொடர்ச்சியாக 03 வருடங்கள் அதிபர் பதவியில் சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

- அதிபராகக் கடமையாற்றுவதற்கான எழுத்து மூல பணிப்பகிர்வு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் (கடிதம்/சம்பவத்திரட்டுக் குறிப்பு)

- தாபனக் கோவை ஏற்பாடுகளுக்கு இணங்க ஒழுக்காற்று மற்றும் விசாரணை தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கோ தண்டனைகளுக்கோ உட்படாதிருத்தல் வேண்டும்.

**3.2 ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் அதிபர்களை பாராட்டுக்குரியவர்களாகத் தெரிவு செய்யும் வகுதிகளும் எண்ணிக்கையும்.**

| பாடசாலை வகை | பாராட்டுப்பெறுபவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1AB பாடசாலை. | 3 |
| 1C பாடசாலை | 3 |
| வகை 2 பாடசாலை | 3 |
| வகை 3 பாடசாலை. | 3 |
| மொத்தம். | 12 |

## 3.3 கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்.

- ✓ விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொண்ட அனைத்து அதிபர்களாலும் மதிப்பீட்டுப் படிவத்திற்கு (படிவம் -B) இணங்க உரிய தகவல்களை பூரணப்படுத்தி ஜூன் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்ப வேண்டும்.

- ✓ விசேடமாகக் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் முந்திய வருடத்தில் 2018 ஜனவரி 01 ஆந் திகதியிலிருந்து டிசம்பர் 31 ந் திகதி வரையிலான காலத்திற்குட்பட்ட தகவல்களை உள்ளடக்கவேண்டும்.

- ✓ மேலே 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலை வகைகளை பிரிதிநிதித்துவம் செய்து அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பாராட்டுக்குரியவர்கள் 12 பேர் தேசிய மட்டத்தில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவதோடு புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படும் ஏனைய பாராட்டுக்குரியவர்கள் மாகாண மட்டத்தில் பாராட்டுக்கு உட்படுத்தப்படுவர்.

## 3.4 அதிபர்களை பாராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யும் போது வலய, மாகாண, கல்வி அமைச்சின் மட்டத்தில் பொறுப்புக்கள்.

<table>
<tr>
<td>வலய மட்டம்.</td>
<td>
<ul>
<li>அனைத்து வலயங்களிலும் 2018 ஆம் ஆண்டில் பாடசாலை வெளிவாரி மதிப்பீட்டு புள்ளிகளை கவனத்தில் கொண்டு கீழே அட்டவணை 01 இல் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு பாடசாலை வகைக்கும் இணங்க உயர்ந்த கல்வித் தரச் சுட்டியைப் பெற்றுக் கொண்ட 02 பாடசாலைகளின் அதிபர்கள் இருவருக்கு விண்ணப்பப் படிவம் (B படிவம்) படிவத்தை வழங்குதல் வலய குரு பிரதீபா இணைப்பு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.</li>
<li>2018 ஆம் ஆண்டில் வெளிவாரி மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படாத பாடசாலைகளில் மாத்திரம் 2017 ஆம் ஆண்டின் கல்வித் தரச் சுட்டியை கருத்தில் கொள்ளலாம்.</li>
<li>இதன்போது பாடசாலை வெளிவாரி மதிப்பீட்டுக்குரிய கல்வித் தரச் சுட்டியைக் கணக்கிட்ட தினத்திற்கு சம்பந்தப்பட்ட பாடசாலையில் ஒரு வருட காலத்திற்கு அதிபராக கடமையாற்றியிருக்க வேண்டும்.</li>
<li>மேல் குறிப்பிடப்பட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள அதிபர் ஒருவர் வெளிவாரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட தினத்தின் பின்னர் இடமாற்றம் பெற்று வேறு பாடசாலையில் சேவையாற்றுவாராயின் முன்னர் பணியாற்றிய பாடசாலைக்கு உரியதாக விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.</li>
</ul>
அட்டவணை இல.01.
<table>
<tr><td>1 AB</td><td>1 C</td><td>2 ஆம் வகை</td><td>3 ஆம் வகை</td></tr>
<tr><td>02</td><td>02</td><td>02</td><td>02</td></tr>
</table>
<ul>
<li>ஏதாவதொரு பாடசாலை வகையில் கல்வித் தரச் சுட்டி 50 ற்கு கூடுதலான பாடசாலைகளாக இல்லாதிருப்பின் விண்ணப்பங்கள் வழங்கப்படக் கூடாது.</li>
<li>தெரிவு செய்யப்பட்ட அதிபர்கள் மதிப்பீட்டுக்கு தகுதியானவர்கள் என்றும் ஒழுக்காற்று விசாரணைக் குற்றச்சாட்டுகளுக்கோ தண்டனைகளுக்கோ உட்படுத்தப்படவில்லை என்பதனை வலயக் கல்விப் பணிப்பளரினால் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்திக் கொண்ட பின் உரிய சிபாரிசை வழங்க வேண்டும்.</li>
<li>பெயர்ப்பட்டியல் மற்றும் மதிப்பீட்டுப் படிவம் (இணைப்பு 02 ற்கு அமைய) ஜூன் 30 ம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.</li>
<li>எஞ்சியுள்ள மதிப்பீட்டு படிவங்களையும் ஆவணங்களையும் தேவையான சந்தர்ப்பங்களில் சமர்ப்பிப்பதற்காக வலயக் கல்விப் பணிமனையில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.</li>
</ul>
</td>
</tr>
</table>

| | |
|---|---|
| **மாகாண மட்டம்** | • மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் ஒருங்கிணைந்த நேர் முகப் பரீட்சைச் சபையினூடாக தேசிய மட்டத்திற்கென பாராட்டுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவர்.<br>• வலய மட்டத்தில் தெரிவு செய்து அனுப்பப்பட்ட அதிபர்களை நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தி ஆவணங்களினதும் தகவல்களினதும் பிழையற்றத் தன்மையை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.<br>• தேவையானவிடத்து பாடசாலையை பரீட்சிக்க முடியும்.<br>• தெரிவு செய்யப்படும் அதிபர்கள் மதிப்பீட்டுக்கு தகுதியுடையவர்கள் என்றும் ஒழுக்காற்று விசாரணைக் குற்றச்சாட்டுகளுக்கோ தண்டனைகளுக்கோ உட்படுத்தப்படவில்லை என்பதனை மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்திக் கொண்ட பின் உரிய சிபாரிசை வழங்க வேண்டும்.<br>• பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்<br>• அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட அதிபர்களுக்கிடையில் ஒரு மாகாணத்திலிருந்து 12 பேர் என்ற வகையில் இறுதி மதிப்பீட்டுக்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர் தேசிய மட்ட மதிப்பீட்டு வைபவத்தில் பாராட்டப் பெறுவர். |
| | |

**இணைப்பு 03.**

தெரிவு செய்யப்பட்ட அதிபர்களின் பெயர்ப் பட்டியல்.

வலயம்..............................................

பாடசாலை வகை (1AB/1C/2/3) ...............

| அதிபரின் பெயர் | பாடசாலையின் பெயரும் விலாசமும் | தேசிய அடையாள அட்டை இலக்கம். | தொடர்பு கொள்ளக் கூடிய தொலைப் பேசி இலக்கம். | பாடசாலைக் கல்வித் தரச் சுட்டி | விசேடக் குறிப்புகள். |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

ஒவ்வொரு பாடசாலை வகைக்கும் ஏற்ற வகையில் தகவல்களை அனுப்ப வேண்டும்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்கள்/ அதிபர்கள் தாபனக் கோவை ஏற்பாடுகளுக்கு ஏற்ப ஒழுக்காற்று நடைமுறைகளின் போது முதலாம் அட்டவணையில் குற்றம் தொடர்பான நடத்தைசார் குற்றச்சாட்டுகளுக்கோ தண்டனைகளுக்கோ உட்பட்டுத்தப்படவில்லை என்றும் பாராட்டுக்குப் பொருத்தமானவர் என்றும் சிபாரிசு செய்கிறேன்.

............................................................ ............................................................

வலயக் கல்விப் பணிப்பாளரின் ஒப்பமும் பதவி முத்திரையும்

மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஒப்பமும் பதவி முத்திரையும்

திகதி:.......................................